முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.508/2017

தேதி : 17-04-2026

(வா.சா.1) – திரு.பாபு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 2-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1, 2-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் எங்களுக்கு தெரியாமல் நான் வாங்கிய சொத்தை கிரையம் செய்ததால் தாக்கல் செய்துள்ளேன். 1, 2ம் பிரதிவாதிகள் சட்டத்திற்குட்பட்டு கிரைய ஒப்பந்தத்தின்படி கிரையம் நீதிமன்றத்தின் மூலம் OS 152/16 பதிவு செய்துள்ளார்கள் என்றும், எனவே அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி EP 24/17 தாக்கல் செய்து நீதிமனற்த்தின்மூலம் கிரையம் பதிந்துள்ளார்கள் என்றும், எனவே அதை ரத்து செய்யகோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தின்படி ஒப்படைப்பு செய்ய கோரி EA 45/2018 வழக்கு செய்துள்ளோம் என்றும், அதேமனுவில் EA 122/18 என்ற Claimமனு தாக்கல் செய்துள்ளதால் ஒரே சமயத்தில் இவ்வழக்கையும் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஒப்படைப்பு கோரி 1, 2 பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அவர்கள் ஒப்படைப்பு பெறக்கூடாது என்று நானும் OS 410/17 வழக்கின் வாதிகளும் சேர்ந்து மேற்படி ஒப்படைப்பு மனுவில் Claim மனுவும் (122/18 ,123/18) மேலும் இவ்வழக்கையும் தாக்கல் செய்தும் காலம்கடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

2. வழக்கு சொத்து ஆதியில் 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் 3ம் பிரதிவாதிக்கு கொடுத்த பவர் பத்திரத்தின்படி 3ம் பிரதிவாதி 1, 2ம் பிரதிவாதிகளுக்கு கிரைய ஒப்பந்தம்எழுதி கொடுத்தார் என்றும், அதன்படி தான் 1, 2ம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. நீதிமன்றத்தின் மூலம் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் பதிந்தது எப்போது தெரியும் என்றால் 2017ல். எப்படி மேற்படி விபரம் தெரியவந்தது என்றால் நாங்கள்

வழக்கு சொத்தை பார்வையிட்டபோது 1 முதல் 3ம் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்த விபரம் தெரியவந்தது. நாங்கள் 4ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கினோம், நான் சொல்வது தவறு என்றும், 4ம் பிரதிவாதி கொடுத்த பவர் பத்திரத்தின்படி தான் 1, 2ம் பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியிடம் கிரைய ஒப்பந்தம் பெற்று நீதிமன்றத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், தற்போது அவர்களின் அனுபவத்தை இடையூறு செய்வதற்காக 4ம் பிரதிவாதி எங்களுக்கு ஒரு கிரையம் ஆவணம் எழுதிகொடுத்ததாக சொல்கிறோம் என்றால் 4ம் பிரதிவாதி அபுதாகிர் என்பவரக்கு ஒரு பதிவு பத்திரம் எழுதிக்கொடுத்தார், அந்த பவர் பத்திரத்தின்படி ஸ்ரீதர் என்பவருக்கு அவர் 2014ல் கிரையம் செய்தார் என்றும், ஸ்ரீதரிடமிருந்து நாங்கள் மார்ச் 2015ல் 2 கிரைய ஆவணங்கள் மூலம் (70 செண்ட், 30 செண்ட்) கிரைய வாங்கினோம்.

3. அபுதாகிர் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லிய நிலையில் ஏன் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி பரிகாரம் கோரவில்லை என்றால் சாட்சி தற்போது சொத்து அப்படியே தான் உள்ளது என்றும், 1, 2ம் பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதை தான் ஆக்கிரமிப்பு செய்ததாக தவறாக சொல்லிவிட்டதாக சாட்சி சொல்கிறார். வழக்கு சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே நான் சொத்தின் அனுபவத்தில இல்லை என்றும், உண்மையில் வழக்கு சொத்தில் உரிமை இருந்திருந்தால் மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்து விளம்புகை பரிகாரம் கோரியிருப்பேன் என்றும், உரிமை இல்லாததால் அவ்வாறு கோரவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை எனற்ால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றுநம், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் பதிவு செய்து கொடுத்தவர் பெயர் என்ன என்றால் ஸ்ரீதர். அவரை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி பவர் எழுதி கொடுத்ததாக சொல்லும் அபுதாகிரை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. சொத்து விபரத்தை உட்பிரிவு செய்யப்பட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. os 410/17 வழக்கின் வாதி சண்முகம்

வகையறா மற்றும் நானும் சேர்ந்து ஏதோ வழக்கு சர்வே உட்பிரிவு செய்ததுபோல் தாக்கல் செய்திருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல, சண்முகம் யார் என்று எனக்கு தெரியாது, நீதிமன்றத்தில் தான் அவரை பார்த்திருக்கிறேன். சண்முக சொத்தின் சர்வே எண் என்ன என்றால் அதை பற்றி தெரியாது. சண்முகம் EA 45/18 மனுவிலும் EA 122/18 Claim மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், அனைத்து விபரங்களும் தெரியும் என்றும், நானும் சண்முகமும் சேர்ந்து தான் ஒரே நேரத்தில் Claim மனு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள அடங்கலை தாக்கல் செய்யவில்லை என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது, ஆனால் என்வசம் உள்ளது. எனக்கு கிரையம் செய்த ஸ்ரீதர் என்பவர் இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் என்றும், அவரை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் நீதிமன்றத்தின்மூலம் சட்டப்படி கிரையம் பெற்றுள்ளதால் அதை நாங்கள் கேள்வி கேட்க இயலாது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தின்படி தான் 3ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்தார் என்றும் அதன்படி os 152/16 வழக்கு தாக்கல செய்யப்பட்டு 1, 2ம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகி அதன்படி நீதிமன்றத்தின்மூலம் சட்டப்படி நிறைவேற்று மனு மூலம் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், அதனை ஆட்சேபிக்க எங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றும், அந்த கிரைய ஆவணத்தின்படி 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு நிலுவையில் இருக்கும்போது நான் வீண் கட்சி செய்து Claimமனு மற்றும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இலலை என்றும், உண்மைக்கு மாறாக பெறப்பட்ட கிரையத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு உரிமைஇருந்திருந்தால் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு உரிமை இல்லாததால் தான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறான சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்த இவ்வழக்கின்படி 1 முதல் 3 பிரதிவாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்வதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.